# தமிழியல்: திணையும் தளமும் நிலையும்

## மே 11 - மே 14, 2006

டொராண்டோ பல்கலைக்கழகத்தின் தெற்கு ஆசிய கல்விக் கழகமும், வின்சர் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் மற்றும் மானுடவியல் துறையும், தமிழ் கலை தொழில்நுட்பக் கல்லூரியும் இணைந்து திணையும் தளமும் நிலையும் தமிழியல் மாநாட்டை 2006ம் ஆண்டு மே மாதம் 11ம் தேதி முதல் 14ம் தேதி நடத்துகின்றன. தென்அமெரிக்கா, ஐரோப்பா, தெற்காசியா, ஆஸ்திரேலியா நாடுகளைச் சேர்ந்த கல்வியாளர்களை இம்மாநாடு ஒன்றிணைக்கிறது. வரலாறு, இலக்கியம், மானுடவியல், சமயம், கலாசாரா மனோவியல், மொழியியல், புலம்பெயர் கல்வி போன்ற துறைகளில் ஆய்வுக் கட்டுரைகள் மாநாட்டில் இடம்பெறுகின்றன. மநாட்டின் நான்காம் நாள் நிகழ்வுகள் (மே14, 2006) தமிழில் இடம்பெறும்.

**May 14, 2006 - 10:00 am**

**Royal Palace Banquet Hall**
3150 Eglinton Avenue East
Scarborough, Ontario M1J 2H2



கருணா

### காலை அமர்வு

பகல் 10:00 மணி - 12:00 மணி

**தமிழியல்:**

**அணுகுமுறைகள், ஆய்வுநெறிகள், அளவுகோல்கள்**

**தலைமை:** பேராசிரியர் செல்வா கனகநாயகம்

**பங்கேற்பு:** பேராசிரியர் இ.அண்ணாமலை
பேராசிரியர் மார்கெரெட் ட்ரேவிக்
பேராசிரியர் பார்னி பேட்ஸ்
கலாநிதி இ.பாலசுந்தரம்
பேராசிரியர் சுரேஷ் கனகராஜா

பல்வேறு துறைகள் சார்ந்த புலமையாளர்கள் தமிழியல் ஆய்வு தொடர்பாக தமிழ்த் துறை சார்ந்த கருத்துகளைச் சுருக்கமாக இந்த அரங்கில் முன்வைப்பார்கள். எழ்வகையில் தமிழியல் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் புலமையாளர்களுக்கிடையில் கருத்தொற்றுமை கிடையாது. எனினும் தமது துறை சார்ந்த ஆய்வுகள் எழ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன என்பதை புலமையாளர்கள் முன்வைப்பார்கள். துறை சார்ந்த அணுகுமுறைகள் யாவை, பல்வேறு துறைகள், ஒன்றிணைந்தும் கிளை பிரிந்தும் எழ்வாறு தமிழியல் ஆய்வுகளுக்கு உதவ முடியும், பயன்படுத்தப்படும் ஆய்வு நெறிகளின் வலு என்ன, வழுக்கள் யாவை, இப்போதைய ஆய்வுகளில் மேலோங்கியிருக்கும் கூறுகள் என்ன, சிறப்பான தமிழியல் ஆய்வு மையங்கள் எவை போன்ற கேள்விகளுக்கு மறுமொழி தேடும் ஒரு முயற்சியாகவும் இந்த அமர்வு அமையும்.

**12:00 மணியிலிருந்து 1:00 வரை**
**மதிய உணவு இடைவேளை**

### பிற்பகல் அமர்வு

1:00 மணி - 3:00 மணி

**ஈழத்து இலக்கியம்: படைப்பின் கவித்துவம், திறனாய்வின் நெறிமுறைகள், வெளியீட்டின் தொழில்நுட்பம்**

**தலைமை:** கலாநிதி குலமோகன்

**பங்கேற்பு:** பேராசிரியர் நா.சுப்பிரமணியன்
எம்.கண்ணன்
வ.கீதா
தேவகாந்தன்

வாசிப்பின் பரவலாக்கம், இணையவெளி மற்றும் நூற்பழக்கம் ஆகிய கருத்தாக்கங்களின் பின்னணியில் ஈழத்து இலக்கியம் பற்றி புதிய கேள்விகளை எழுப்புவதே இந்த அமர்வின் நோக்கமாக அமைகிறது. புகலிட வாழ்வு, அலைந்துழல்வு, போரியல்/எதிர்ப்பு இலக்கியங்களின் எழுச்சி, தலித் இலக்கியம், பெண்ணிய எழுத்துக்களின் ஆழம் என்பன ஈழத்து இலக்கியத்தின் வடிவங்களையும் படிமங்களையும் பெருமளவுக்கு மாற்றியமைத்துள்ளன. இதன் தொடர்ச்சியாக படைப்பாளிகளும் புதிய அணுகுமுறைகள், புதிய வெளியீட்டு வடிவங்கள், பல்வேறு நாடுகளில் வெளியீடு செய்வதன் மூலம் தேசம் கடந்த வாசிப்பு/வெளியீடு போன்ற புதிய நிலைகளுக்குச் செல்கிறார்கள். இப்புதிய நிலைகளின் வளமும் செழிப்பும் உணரப்பட்டாலும் இவை குறித்த துறை சார்ந்த முறையான அணுகு முறைகள் போதுமான அளவு எம்மிடையே இல்லை. எனவே சமகால இலக்கியப் படைப்புகளின் பல்வேறு பரிமாணங்கள், தரச்சிறப்பு, வெளியீட்டுத் தொழில்நுட்பம், வாசகர் ஏற்பு நிலை, நியமங்கள் போன்றன குறித்து பல்வேறு கேள்விகளை இந்த அமர்வு ஆய்வுக்கு உட்படுத்தும்.

**www.chass.utoronto.ca/~tamils**